TNPSC Tamil Current Affairs 16-17th April 2017

1). மறைந்த, கணிப்பொறியில் முன்னோடியான Robert.W.Taylor எந்த நாட்டைச் சேர்ந்தவர்?

A). பிரான்ஸ்.

B).ஜப்பான்.

C).ஆஸ்திரேலியா.

D).அமேரிக்கா(யுனைடெட் ஸ்டேட்ஸ்).

விடை : D). அமேரிக்கா(யுனைடெட் ஸ்டேட்ஸ்).

85 வயதான கணிப்பொறி மற்றும் இனையதளத்தின் முன்னோடியான Robert.W.Taylor அமேரிக்கா(யுனைடெட் ஸ்டேட்ஸ்) வில் உள்ள கலி்ஃபோர்னியாவில் காலமானார். நவீன கணிணி மற்றும் இனையதளத்தினை உறுவாக்குவதில் கருவியாக விளங்கியவர். “Microsoft Word” இனைக் கண்டறிய முக்கியக் காரணம் இவரே.

2). ”Unemployment Allowance“ திட்டத்தினை எந்த மாநில அரசாங்கம் அறிமுகப்படுத்தியது?

A). Andhra Pradesh.

B).Uttar Pradesh

C).Himachal Pradesh.

D).Madhya Pradesh.

விடை : C). Himachal Pradesh.

ஹிமாசல பிரதேசத்தின் முதல் அமைச்சரான திரு.வீரபத்ர சிங் சமீபத்தில், சம்பாவில் நடந்த ஹிமாசல பிரதேசத்தின் 70 ஆவது நிறுவன நாளன்று Unemployment Allowance திட்டத்தினை அறிமுகப்படுத்தினார். இத்திட்டத்தின்படி, வேலைக்குண்டான தகுதிகள் இருந்தும் வேலை இல்லாதோர்க்கு மாதம் ரூபாய் 1,000 மும், இயலாமை(மாற்றுத் திறனாளிகள்) நிலையில் இருப்போர்க்கு மாதம் ரூபாய் 1,500 ம் வழங்கப்படும் மற்றும் ஒப்பந்தத்

தொழிலாளர்களின் நிலையை முறைப்படுத்துவதற்காக தற்போதுள்ள 5 வருடங்களை 3 வருடங்களாகக் குறைக்கப்பட்டுள்ளது.

3). மாநிலத்தில் உள்ள திருநங்கைகள் வாக்காளர்களாகப் பதிவு செய்து கொள்வதர்காக சிறப்பு விழிப்புணர்வு இயக்கத்தை தொடங்கிய முதல் இந்திய மாநிலம் எது?

A). கேரளா.

B).மகாராஷ்ட்ரா.

C).கர்நாடகா.

D).ஒடிசா.

விடை : B). மகாராஷ்ட்ரா.

மகாராஷ்ட்ரா மாநிலத்தில் உள்ள திருநங்கைகள் வாக்காளர்களாகப் பதிவு செய்து கொள்வதர்காக சிறப்பு விழிப்புணர்வு இயக்கத்தை இந்தியத் தேர்தல் ஆணையத்தின் மகாராஷ்ட்ரா மாநிலக் கிளை ஏப்ரல் 15- மூன்றாம் பாலின தினத்தன்று தொடங்கியுள்ளது. இந்தியத் தேர்தல் ஆணையத்தின் கணக்கின்படி மகாராஷ்ட்ரா மாநிலத்தில் மொத்தம் இருக்கும் 10,00,000 திருநங்களில் 1,700 பேர் மட்டுமே வாக்காளர்களாகப் பதிவு செய்யப்பட்டுள்ளனர். திருநங்களுக்கு மூன்றாம் பாலின அந்தஸ்தை உச்ச நீதிமன்றம் 15 ஏப்ரல் 2014 ல் தனது தீர்ப்பில் வழங்கியது.

4). மத்திய அரசினால் கல்வி மேற்படிப்புகளுக்காக அறிமுகம் செய்யப்பட்ட RUSA இனையதளத்தின் விரிவாக்கம் யாது?

A). Rashtrya Uchchatar Shiksha Abhiyan.

B). Rashtrya Uttam Shiksha Abhiyan.

C). Rashtrya Unmukht Shiksha Abhiyan.

D). Rashtrya Unnatsheel Shiksha Abhiyan.

விடை : A). Rashtrya Uchchatar Shiksha Abhiyan.

மனிதவள மேம்பாட்டுத் துறை அமைச்சரான பிரகாஷ் ஜாவடேகர் ஏப்ரல் 17,2017 அன்று கல்வி மேற்படிப்புகளுக்காக Rashtrya Uchchatar Shiksha

Abhiyan(RUSA) இனையதளம் மற்றும் அலைபேசி செயலியை அறிமுகப் படுத்தினார். இதன்மூலம் அம்மாநிலத்தில் உள்ள கல்லூரிகளில் உள்ள வசதிகளைத் தெரிந்து கொள்வதன் மூலம் மேற்படிப்புகளுக்காக சிறந்த இடத்தைத் தேர்வு செய்து கொள்ள முடிகிறது. Rashtrya Uchchatar Shiksha Abhiyan(RUSA) இனையதளத்துடன் நிதி மற்றும் சீர்திருத்தத் தடங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இது 24*7 மணி நேரமும் கண்காணிப்பில் இருக்கும். இது மத்திய அரசினால் 2013 ஆம் ஆண்டு மேற்படிப்பில் சிறந்து விளங்குவத்றகாக அறிமுகப்படுத்தப்பட்ட திட்டம்.

5). Gayathri Pullela எந்த விளையாட்டுடன் தொடர்புடையவர்?

A). Badminton.

B).Tennis.

C).Hockey.

D).Football.

விடை : A). Badminton.

இந்தோனேசியாவில் உள்ள ஜகர்தாவில் நடைபெற்ற ”Pembangunan Jaya Raya Junior Grand Prix” பேட்மிண்டன் போட்டியில் Gayathri Pullela ஒற்றையர் மற்றும் இரட்டையர் பிரிவில் வெற்றிபெற்றார். இவர் U-15 ஒற்றையர் ஆட்டத்தில் தனது போட்டியாளரான Samiya Farooqui ஐ 21-11, 18-21, 21-16 என்ற கணக்கில் வெற்றி பெற்றார். பின்னர் Gayathri Pullela மற்றும் Samiya Farooqui இரட்டையர் ஆட்டத்தில் இந்தோனேசியாவின் Kelly Larissa மற்றும் Shelandry Vyola யை 21-17, 21-15 என்ற கணக்கில் வெற்றி பெற்றனர். இவர்கள் இருவரும் ஹைதராபாத்தில் உள்ள Pullela Gopichand Academy யில் பயிற்ச்சி பெறுபவர்கள். Pullela Gopichand Academy யை நடத்தி வரும் Pullela Gopichand எனும் பேட்மிண்டன் பயிற்ச்சியாளரின் மகள் தான் Gayathri Pullela.

6). 2017 ஆம் ஆண்டிற்கான டைம்ஸ் பத்திரிக்கையின் வாடிக்கையாளர்களின் வாக்குப்படி மிகவும் செல்வாக்கு மிக்க மனிதராகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர் யார்?

A).Leni Robredo.

B).Rodrigo Duterte.

C).Narendra Modi.

D).Justin Trudeau.

விடை : B). Rodrigo Duterte.

பிலிப்பைன்ஸ் நாட்டுக் குடியரசுத் தலைவர் Rodrigo Duterte, 2017 ஆம் ஆண்டிர்கான டைம்ஸ் பத்திரிக்கையின் வாடிக்கையாளர்களின் வாக்குப்படி மிகவும் செல்வாக்கு மிக்க மனிதராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். ஏப்ரல் 16,2017 அன்று நடந்து முடிந்த இவ்வாக்குப்பதிவில் மொத்தமுள்ள "ஆம்" விருப்பத்தினைத் தேர்வுசெய்தவர்களின் வாக்கில் இவர் 5% வாக்கினைப் பெற்றுள்ளார். டைம்ஸ் பத்திரிக்கை ஏப்ரல் 20 2017 அன்று மிகவும் செல்வாக்கு மிக்க 100 மனிதர்களின் பட்டியளை வெளியிட்டது.

7). சமீபத்தில் மறைந்த, உலகின் அதிக வயதான "Emma Merona" எந்த நாட்டைச் சேர்ந்தவர்?

A).Norway.

B). Jamaica.

C).Italy.

D).France.

விடை : C). Italy.

உலகின் அதிக வயதான பெண் "Emma Merona"(117) இத்தாலியில் உள்ள வெர்பானியா வில் ஏப்ரல் 15,2017 அன்று உயிரிழந்தார். இவர் நவம்பர் 29, 1899 ல் இத்தாலியில் உள்ள பையட்மோண்ட் இல் பிறந்தவர். 1800 களில் பிறந்து 2017 வரை வாழ்ந்த முதல் நபர் இவரே. இவர் "வாழ்ந்துவரும் பழைமையான மனிதர் மற்றும் பழைமையான பெண்" என்பதிற்க்காக கின்னஸ் புத்தகத்தில் இடம்பெற்றுள்ளார். Emma Merona காவின் மறைவுக்குப் பின்னர் ஜமைகாவைச் சேர்ந்த வைலட் ப்ரௌன் உலகின் அதிக வயதான நபராகிறார்.

8). 2017 ஆம் ஆண்டிற்கான "World Hemophilia Day" வின் நோக்கம் என்ன?

A). Count me in.

B). Together We Can.

C).Improve Your Life.

D).Hear their Voices.

விடை : D). Hear their Voices.

உலகில் வாழும் இரத்த ஒழுக்கு (Hemophilia) குறைபாடுடையவர்களிடம் அக்கறையுடன் கவனித்துக் கொள்வதற்காக ஏப்ரல் 17 அன்று "World Hemophilia Day" அனுசரிக்கப்படுகிறது. இத்தினத்தின் 2017 ஆம் ஆண்டிற்க்கான நோக்கமானது மக்கள் அனைவரும் ஒண்றுபட்டு பாதிக்கப்பட்டவர்களின் குறைகளைக் கேட்டறிந்து உதவுவதே ஆகும். Hemophilia என்பது, மனித உடம்பில் ஏதேனும் காயங்கள் ஏற்பட்டு இரத்தம் வந்தால், அப்பொழுது சில புரதங்களின் குறைபாடுகளின் காரணங்களினால் மனித இரத்தம் உரையும் தன்மையை இழந்து அல்லது மிகவும் குறைவாக இரத்தம் உரையும் தன்மையுடன் காணப்படுவதாகும். Hemophilia ஒரு அறிய வகை நோய். இது 10,000 த்தில் ஒருவரே இந்நோயுடன் பிறப்பார்.

9). "2017 Mens Singles Singapore Open Badminton" போட்டியில் வென்றவர் யார்?

A). S N Reddy.

B).Anthony Sinisuka Ginting.

C).Sai Praneeth Bhamidipati.

D).Kidambi Srikanth.

விடை : C). Sai Praneeth Bhamidipati.

இந்தியாவைச் சேர்ந்த Sai Praneeth Bhamidipati, சிங்கப்பூரில் உள்ள சிங்கப்பூர் இண்டோர் ஸ்டேடியத்தில் நடைபெற்ற "2017 Mens Singles Singapore Open Badminton" போட்டியில் தனது போட்டியாளரான Kidambi Srikanth ஐ 17-21, 21-17, 21-17 என்ற கணக்கில் வீழ்த்தி வெற்றி பெற்றார். இதைத்தவிர்த்து தைவானைச் சேர்ந்த "Tai Tzu-ying" தனது போட்டியாளரான ஸ்பெயினைச் சேர்ந்த "Carolina Marin" ஐ பெண்கள் ஒற்றையர் பிரிவில் 21-15, 21-15 என்ற கணக்கில் வீழ்த்தி வெற்றி பெற்றார். ஆண்கள் இரட்டையர் பிரிவில் "M Boe & C Mogensen" கூட்டணி "J Li & Y Liu duo" கூட்டணியை 21-13, 21-14 என்ற கணக்கில் வீழ்த்தி வெற்றி பெற்றனர். பெண்கள் இரட்டையர் பிரிவில் " K R Juhl & C Pedersen" கூட்டணி " M Matsutomo & A Takahashi"

கூட்டணியை 21-18, 14-21, 21-15 என்ற கணக்கில் வீழ்த்தி வெற்றி பெற்றது. ஆண்கள் கலப்பு இரட்டையர் பிரிவில் "K Lu & Y Huang " அணி, "P Dechapol & S Teiratennachal " அணியை 19-21, 21-16, 21-11 என்ற கணக்கில் வீழ்த்தி வெற்றி பெற்றது.

10). சீனா மற்றும் நேபால் நாட்டிற்கிடையேயான "Sagarmatha Friendship 2017" எனும் முதல் ராணுவ கூட்டுப் பயிற்சி எந்த நகரில் நடைபெற்றது?

A).Guangzhou.

B).Beijing.

C).Butwal.

D).Kathmandu.

விடை : D). Kathmandu.

தீவிரவாத ஒழிப்பு மற்றும் பேரிடர் மேலான்மை போன்றவற்றைக் கருத்தில் கொண்டு சீனா மற்றும் நேபால் நாட்டிற்கிடையே "Sagarmatha Friendship 2017" எனும் ராணுவ கூட்டுப் பயிற்சி நேபாலில் உள்ள காத்மண்டுவில் ஏப்ரல் 17,2017 ல் தொடங்கி 10 நாட்கள் நடைபெற்றன. உலகையே அச்சுருத்திக் கொண்டிருக்கும் தீவிரவாதத்திலிருந்து ஆயத்தமாயிருத்தலைக் கூறும் வகையில் ராணுவ நிகழ்ச்சிகள் நடைபெற்றன. Sagarmatha என்பது சீனா மற்றும் நேபால் நாட்டிற்கிடையே இருக்கும் எவரெஸ்ட் சிகரத்தைக் குறிக்கும் நேபாலப் பெயர்.